செ.வெ.எண்:86 நாள்:30.10.2018

**கரூர் மாவட்டம்**

**மகாத்மா காந்தியடிகளின் 150 வது பிறந்த தினத்தை சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டம் போன்றவற்றினை கண்டு பயனடைய மாவட்ட ஆட்சியர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அன்புடன் அழைக்கின்றார்.**

மகாத்மா காந்தியடிகளின் 150 வது பிறந்த தினத்தை மிகச்சிறப்பாகக் கொண்டாடும் வகையில், பாரத பிரதமரின் உயரிய நோக்கில், இந்திய உணவு தர நிர்ணய ஆணைய வழிகாட்டுதலின்படி, ஆரோக்கிய பாரத பயணம் (Swasth Bharat Yatra) மிதிவண்டி ஓட்டமாக, உலக உணவு தினமான 16.10.2018 அன்று துவங்கப்பட்டு, இந்தியா முழுவதும் 100 தினங்கள் 6500 கி.மீ. பயணம் மேற்கொண்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தலைநகர் புதுதில்லியில் நிறைவடைய இருக்கின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டம் (Cyclothbn) கரூர் மாவட்டத்தில் 31.10.2018 முதல் 02.11.2018 வரை நடைபெற உள்ளது.

**<u>மிதிவண்டி ஓட்டம் வரவேற்பு :</u>**

31.10.2018 அன்று, திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து வரும் மிதிவண்டியாளர்களை, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சுங்கச் சாவடியில் சிறப்பான முறையில் வரவேற்பதுடன், அரவக்குறிச்சி வட்டாரம், அரவை ஆனந்த மஹாலில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. அதன்பின், அன்றையதினம் மாலையில் சுக்காலியூர் பகுதியில் உள்ள குருவித்யாலயா பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சியில், திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து மிதிவண்டி ஓட்டத்தில் பங்கேற்ற மிதிவண்டியாளர்களை வரவேற்று, அவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் மற்றும் மிதிவண்டி ஓட்டம் குறித்த மையக் கருத்தினைக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும்.

**<u>நடைபயணம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்:</u>**

01.11.2018 அன்று காலை 07.00 மணிக்கு கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா முதல் கோவை ரோடு ரவுண்டானா வரை, சுதந்திர போராட்ட தியாகிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளும், பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுகள் குறித்த விழிப்புணர்வு நடைபயணம் நடைபெறும். அதன் தொடர்ச்சியாக, மதுரை ரோட்டில் அமைந்துள்ள வள்ளுவர் மஹாலில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடைபயணத்தில் பங்கேற்போரின் சிறப்புரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பின்னர், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளான, பாரம்பரிய உணவுகள் காட்சிப்படுத்துதல், மருத்துவ முகாம்கள், சத்தான மற்றும் பாதுகாப்பான உணவுகள் குறித்த நிகழ்ச்சிகள், நெருப்பில்லா சமையல் மற்றும் உப்பில் அயோடின் சோதனை போன்றவை, சேலம் ரோட்டில் அமைந்துள்ள பரணி பார்க் பள்ளி மற்றும் தாந்தோனிமலை அரசு கலைக் கல்லூரியிலும் காலை முதல் மதியம் வரை நடைபெறும். மேலும், மாலை நேரத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தாந்தோனிமலை அரசுக் கலைக்கல்லூரியில் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் சிறப்பான முறையில் பங்களிப்பினை வழங்கியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

**உணவுப் பொருட்கள் தரம் உடனடி பகுப்பாய்வு :**

மேலும், காலை முதல் மதியம் வரை அரசு கலைக் கல்லூரியில் மாணவர்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து உடனடி பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கப்படும் மற்றும் மதியம் முதல் மாலை வரை கரூர் பேருந்து நிலையம் அருகில் பொதுமக்கள், தாங்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து உடனடி பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கப்படும் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**ஆரோக்கிய பாரத பயணம் - மிதிவண்டி ஓட்டம் :**

02.11.2018 அன்று, சேலம் ரோட்டில் உள்ள பிரேம் மஹாலில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கீதா மணிவண்ணன் அவர்கள் ஆகியோர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்படும் மிதிவண்டி ஓட்டம், ஈரோடு மாவட்டத்திற்கு நொய்யல் வழியாகச் செல்கிறது. அதுசமயம், நொய்யல் பகுதியில் உள்ள மங்கள மஹால் என்னும் இடத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (பாரம்பரிய உணவுகள் காட்சிப்படுத்துதல், மருத்துவ முகாம்கள், சத்தான மற்றும் பாதுகாப்பான உணவுகள் குறித்த நிகழ்ச்சிகள், நெருப்பில்லா சமையல் மற்றும் உப்பில் அயோடின் சோதனை போன்றவை) நடைபெறும். எனவே, கரூர் மாவட்ட பொதுமக்கள் மற்றும் நுகர்வோர்கள் மேற்காண் தினங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளினை கண்டு, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுமுறைகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**